உ



சோழாவத்தை வேலணையை பிறப்பிடமாகவும், யாழ்/கொட்டடி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி நாகம்மா பாலசுப்பிரமணியம்

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்த

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

## நாக ஜோதி

01.07.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சோழாவத்தை வேலணையை பிறப்பிடமாகவும், யாழ். கொட்டடி,
திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி நாகம்மா பாலசுப்பிரமணியம்

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்த

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## நாக ஜோதி

01.07.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்




கண்ணிமை காப்பதுபோல் எமைப்
பேணி வளர்த்து வேண்டும்
பணியனைத்தும் செய்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ
வழிகாட்டி வைத்த எம்
அன்னையின் பொன்னடிக்கு
இம்மலர் சமர்ப்பணம்

திருநெல்வேலி **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



பிறப்பு

19-05-1935

இறப்பு

01-06-2005

அமரர்

# திருமதி நாகம்மா பாலசுப்பிரமணியம்

## திதி நிர்ணயம்

பாரோங்கு பார்த்திபத்திலமைந்த வைகாசி
நின்றோங்கு மமரபட்ச தசமிதனில் - உவப்புடனே
பேரோங்க புவிநீத்து நாகம்மா நன்னினார்
அருளோங்கு சிவன்தாள் பணிந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயக வணக்கம்

வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிட கவலை தீருமே

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமட மானி
பங்கையச் செல்வி பாண்டிமா தேவி
பணி செய்து நாள்தோறும் பரவ
பொங்கழலுருவன் பூதநாய கனருளால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கன்னி தன்னொடு மமர்ந்த
ஆலவாயாவது மிதுவே

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானு மதுவே வேண்டி னல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டெனில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனை
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்
தேனற்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

முருகன்துணை

## திருப்புகழ்

ஆறுமுடி யாட ஆறுமுக மாட
ஆரவட மாட - வரைபோலீர்
ஆறுபுய மாட ஞானவருள் ஊறி
ஆறுவிழியாட - நகையாட
வீறுகல னாடவாகு வலமாட
வீசுபடையாட - வினையாட
வேத பரநாதர் கீத கழலாட
வேடுவகுமாரி - வலமாட
ஏறுமயிலாட கூறு மயிலாட
ஈறில் பிடியானை - யிடமாட
ஏழுலகுமாட ஏழு பவமாட
ஞானநடமாடும் - முருகேசா
நாறுமலர்த தாராறு பதமேறி
நாத விசைபாடும் - பொழில்சூழும்
ஞான தவயோகர் சேருநலையூரில்
நாளும் அருள்கூரும் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னைப்பத்து

## (ஆத்தும பூரணம்)

## திருத்தில்லையில் அருளியது

## கலிவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையினர் அன்னே என்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார் அன்னே என்னும் 1

கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும் 2

நித்த மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர்ஆ னந்தரால் அன்னே என்னும் 3

ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேடம் இருந்தவா றன்னே என்னும்
வேடம் இருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடும் இதுஎன்னே அன்னே என்னும் 4

நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரால் அன்னே என்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
ஆண்டன்பு செய்வரால் அன்னே என்னும் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னற் கரியசீர் உத்தர மங்கையர்
மன்னுவ தென்நெஞ்சில் அன்னே என்னும்
மன்னுவ தென்நெஞ்சில் மாலயன் காண்கிலார்
என்ன அதிசயம் அன்னே என்னும். 6

வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேற்கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும் 7

தாளி அறுகினர் சந்தனச் சாந்தினர்
ஆளெம்மை ஆள்வரால் அன்னே என்னும்
ஆளெம்மை ஆளும் அடிகளார் தங்கையில்
தாள மிருந்தவா றன்னே என்னும் 8

தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்
நையும்இது என்னே அன்னே என்னும். 9

கொன்றை மதியமுங் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றெனக் கானவா றன்னே என்னும் 10

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்த வல்லி தெய்வானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற் கோவில் நானமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே
(கற்பூரநாயகி)

புவன முழுதாளுகின்ற புவனேஸ்வரி
புர மெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம் பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி
(கற்பூரநாயகி)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயேஎந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல்கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழியனுப்பு
(கற்பூரநாயகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூட வேண்டும்
எண்ணமெல்லாம் உன் நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளைத் தீருமம்மா
(கற்பூரநாயகி)

நெற்றியிலுன் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலுன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மேன்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழ வேண்டும்
சுற்ற மெல்லாம் நீடுழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆள வேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா
(கற்பூரநாயகி)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள் செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ
கன்றுக்குப் பசுவின்றிச் சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ
(கற்பூரநாயகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கே நானடிமையாக வேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என் நெஞ்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நானென்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழ வேண்டும்.

(கற்பூரநாயகி)

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு வழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை

(கற்பூரநாயகி)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லையே தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை

(கற்பூரநாயகி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரான் தஞ்சமடி

நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே இரவு பகல் காணேனடி

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறைமீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமடி - கிளியே கவலையெல்லாம் தீருமடி

எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப் பட்டாலென்
கந்தன் திருவடிகள் - கிளியே காவல் அறிந்திடடி

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களடி - கிளியே ஆறுமுகன் தஞ்சமடி

சுவாமி யோகநாதன் சொன்ன திருப்பாட்டைந்தும்
பூமியில் சொன்னாலெடி - கிளியே பொல்லாங்கு தீருமடி

**சிவயோக சுவாமிகள்**
(நற்சிந்தனை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், தேவை இல்லாமலும், பின் விளைவு அறியாமலும், பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள்.
- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள்.
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசிவரை வாதாடாதீர்கள்.
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல், இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள், அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

- ❖ வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்; அதை நழுவவிடாதீர்கள்.
- ❖ வாழ்க்கை ஒரு பயணம்; அதை சென்று முடியுங்கள்.
- ❖ வாழ்க்கை ஒரு விடுகதை; அதை விடுவியுங்கள்.
- ❖ வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதில் ஈடுபடுங்கள்.
- ❖ வாழ்க்கை ஒரு போராட்டம்; அதை வென்று காட்டுங்கள்
- ❖ வாழ்க்கை ஒரு வெகுமதி; அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ வாழ்க்கை ஒரு போட்டி; அதில் வெற்றி பெறுங்கள்.
- ❖ வாழ்க்கை ஒரு கலை; அதை அழகுபடுத்துங்கள்
- ❖ வாழ்க்கை ஒரு வேதனை; அதை தாங்கிக் கொள்ளுங்கள்
- ❖ வாழ்க்கை ஒரு சவால்; அதை எதிர்நோக்குங்கள்
- ❖ வாழ்க்கை ஒரு சோகம்; அதற்கு மனம் தளராதீர்கள்
- ❖ வாழ்க்கை ஒரு பிரச்சினை; அதற்குத் தீர்வு காணுங்கள்

# முக்கியமானவை மூன்று

- ✪ மதிக்க வேண்டிய மூன்று :- **முதுமையானோர், மார்க்கம், சட்டம்.**
- ✪ நேசிக்க வேண்டிய மூன்று :- **நேர்மை, தூய்மை, கடின உழைப்பு.**
- ✪ போற்ற வேண்டிய மூன்று :- **அறிவு, அழகு, பண்பு**
- ✪ பேணி வளர்க்க வேண்டிய மூன்று :- **திருப்தி, தைரியம்,மனமகிழ்ச்சி.**
- ✪ தவிர்க்க வேண்டிய மூன்று :- **புகைத்தல், மதுவருந்துதல், சூதாடல்**
- ✪ அடக்க வேண்டிய மூன்று :- **நா, சோதனை, கோபம்**
- ✪ கட்டாயம் கவனிக்க வேண்டிய மூன்று :- **பேச்சு, நடைமுறை, செயல்கள்**
- ✪ ஆதரிக்க வேண்டிய மூன்று :- **வாக்குறுதி, நட்பு, அன்பு**
- ✪ ஒழிக்க வேண்டிய மூன்று :- **திருட்டு, சோம்பல், பொய்**
- ✪ விரும்ப வேண்டிய மூன்று :- **கருணை, நற்குணம், மன அமைதி**
- ✪ வெறுக்க வேண்டிய மூன்று :- **பெருமை, அநீதி, வாக்குமீறல்**
- ✪ தப்பித்துக்கொள்ள வேண்டிய மூன்று :- **தீயஎண்ணம், பொறாமை, பிடிவாதம்**
- ✪ அஞ்ச வேண்டிய மூன்று :- **களவு, கோள், பொய்**
- ✪ எதிர் கொள்ள வேண்டிய மூன்று :- **கவலை, பயணம், மரணம்**
- ✪ போரிட வேண்டிய மூன்று :- **தேசம், கண்ணியம், நட்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- அமரர் வேலுப்பிள்ளை + செல்லம்மா
  - பாலசுப்பிரமணியம்
- அமரர் நாகநாதர் + பார்வதிப்பிள்ளை
  - **நாகம்மா**


பாலசுப்பிரமணியம் + நாகம்மா

- பத்மநாதன் + சகஸ்தினாவதி (சித்திரா)
  - சுஹாசினி
  - பிரணவன்
  - சந்தூரன்
  - பிரஹாசினி
- பாலராஜேஸ்வரன் + சாந்தினி
  - கோபிகன்
- நாகராஜேஸ்வரி + சுகிர்தலிங்கம்
  - சிந்துஜன்
  - அபிராமி
- சுந்தரேஸ்வரி
- புவனேஸ்வரி (அமரர்)
- தியாகேஸ்வரி + சிவரஞ்சன்
  - விதுசாயினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எம் குல விளக்காகவும் ஒப்பற்ற அன்னையாகவும் திகழ்ந்து அகில வாழ்வு நீக்கி சிவபதப்பேறு அடைந்தவேளை பொங்குமன்பால் அருகிருந்து அரும்பணி புரிந்தோர்க்கும், எம் ஆற்றொணாத்துயரில் பங்கு கொண்டு மலர்வளையங்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தும், நேரில் அஞ்சலி செலுத்திய உற்றார் உறவினர் அன்பர்கள் அனைவர்க்கும், அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரிகைகளிலும் கலந்து உதவிகள் புரிந்த அனைவர்க்கும் குறுகிய காலத்தில் இம்மலரை அச்சிட்டு உதவிய தயா அச்சகத்தினர்க்கும் எம் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி


இங்ஙனம்

**குடும்பத்தினர்**

தயா அச்சகம் கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட்
138, நாவலர் வீதி, யாழ்ப்பாண (நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org